## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை – கொரோனா வைரஸ் (Covid-19) நோய்த்தொற்றை தடுக்க குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 144ன் கீழ் தடை உத்தரவு நீட்டித்தது – தடை உத்தரவு தளர்வு இல்லாத சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய 4 மாவட்டங்களில் பணிபுரியும் மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்கள் அலுவலக பணி மேற்கொள்வதிலிருந்து விலக்கு (Exemption) ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நலத் (அ.ந.மு) துறை**

அரசாணை (நிலை) எண். 6

நாள் 03.06.2020

ஸ்ரீ சார்வரி, வைகாசி–21,

திருவள்ளுவர் ஆண்டு, 2051

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள்.23.03.2020.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 24.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.2, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.31.03.2020.
4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 15.04.2020.
5. அரசாணை (நிலை) எண்.3, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.17.04.2020.
6. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 03.05.2020.
7. அரசாணை (நிலை) எண்.4, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.05.05.2020.
8. தலைமைச் செயலாளர், பொதுத்துறை கடிதம் எண் CSCR/130-216/2020, நாள் 17.05.2020.
9. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 17.05.2020.
10. 

மீள படிக்கப்பட்டது:

11. அரசாணை (நிலை) எண்.5, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள்.21.05.2020.
12. அரசாணை (நிலை) எண். 262, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (டீஎம்–II) துறை, நாள். 31.5.2020.
13. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் ந.க. எண்.3/நிர்.2/2020, நாள். 01.06.2020.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தவிர்க்க அத்தியாவசிய பணிக்காக மாற்றுத்திறனாளிகள் நலத்துறை உட்பட பல்வேறு துறைகள் பணியாற்றிடவேண்டும் எனஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக, நான்காவதாக, ஆறாவதாக மற்றும் ஒன்பதாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் காணும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று பல்வேறு துறைகளிலும் உள்ள மாற்றுத்திறனாளி அரசுப் பணியாளர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, தடை உத்தவு பிறப்பிக்கப்பட்ட நாளான 24.03.2020 முதல் 31.05.2020 வரையிலான காலங்களுக்கு அவர்கள்

Scanned with CamScanner

Scanned with CamScanner

தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) மேலே மூன்றாவதாக, ஐந்தாவதாக, ஏழாவதாக மற்றும் பத்தாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே பன்னிரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், மண்டலம் VII மற்றும் VIII ஆகியவற்றில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள் சிகப்பு மண்டலமாக தொடர்ந்து வரும் நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் தளர்வுகள் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்காணும் தடை தளர்வுகள் இல்லாத மாவட்ட அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் மாற்றுத்திறனாளிகள் பணியாளர்களுக்கு மட்டும் அரசால் அறிவிக்கப்பட்ட 1–6–2020 முதல் 30–6–2020 வரை தடை உத்தரவு நாட்களுக்கு மாற்றுத்திறனாளிகள் அலுவலக பணிகள் மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

4. மேலே பத்தி 3ல் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கோரிக்கையை ஏற்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய 4 (நான்கு) தடை தளர்வுகள் இல்லாத மாவட்ட அரசு அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் மாற்றுத்திறனாளிகள் பணியாளர்களுக்கு மட்டும் அவர்களின் உடல் குறைபாட்டையும், பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு, தடை உத்தரவு நீட்டிக்கப்பட்ட நாளான 1–6–2020 முதல் 30–6–2020 வரை அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பணி மேற்கொள்வதிலிருந்து விலக்களித்து (Exemption) அரசு ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்,
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை–5.
தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகள்,
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து துறைத் தலைவர்கள்,
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

மா. கற்பகக்கனி
பிரிவு அலுவலர் 3/6/20

தி.க
3/6/2020

Scanned with CamScanner

Scanned with CamScanner